செ.வெ.எண் : 861 நாள் 05.10.2010

# பத்திரிகை செய்தி

## தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியத்தின் ஐந்தாவது கூட்டம்.

**நாள்:- 05.10.2010.**

****************

அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள தமிழக அரசு, அமைப்புசாரா தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்தவும் அவர்களின் நலனை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணிநிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம் இயற்றியது. இச்சட்டத்தில் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு நலத்திட்டங்களை உருவாக்கவும் அவற்றை செயல்படுத்துவதற்கென நல வாரியத்தை அமைக்கவும் வழிவகை செய்யப்பட்டு 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டு பின்பு 20.07.2000-ல் தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம் உருவாக்கப்பட்டது. சில நிர்வாக காரணங்களினால் இவ்வாரியம் 21.07.2004 அன்று தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டது.

01.09.2006 முதல் மீண்டும் தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம் தனியாக ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. அரசு இவ்வாரியத்தின் தலைவராக மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் அவர்களை நியமனம் செய்தது.

இவ்வாரியத்தில் பதிவு செய்யும் அமைப்பு சாரா தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்கள் பயன்பெறும் வகையில் கீழ்க்கண்ட பல்வேறு நலத்திட்டங்களை தமிழக அரசு உருவாக்கி மிக சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

இவ்வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு விபத்து மரண உதவித் தொகையாக ரூ. 1,00,000/- மும் விபத்து ஊனத்திற்கு ஊனத்தின் தன்மைக் கேற்ப உதவித் தொகையும், இயற்கை மரண உதவித் தொகையாக ரூ. 15,000/-மும், ஈமச்சடங்கு உதவித் தொகையாக ரூ. 2,000/- மும் கல்வி உதவித் தொகையாக ரூ. 1,000/- முதல் ரூ. 6000/- வரை, திருமண உதவித் தொகை ரூ. 2000/-, மகப்பேறு உதவித் தொகை ரூ. 6,000/-, மருத்துவ ரீதியான கருக்கலைப்பு / கருச்சிதைவு ரூ. 3,000/-, கண் கண்ணாடி வாங்க உதவித் தொகை 500/-க்கு மிகாமல் மற்றும் ஓய்வூதியம் ரூ. 400/- பிரதி மாதம் வழங்கப்படுகிறது

தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம் துவங்கப்பட்ட நாளிலிருந்து 31.08.2010 வரை 1,02,510 தொழிலாளர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளார்கள். 13.05.2006 முதல் 30.08.2010 வரை 12,917 பயனாளிகளுக்கு ரூ. 300,31,034/- நலத்திட்ட உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

இன்று 05.10.2010 நடைபெற்ற தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியத்தின் ஐந்தாவது கூட்டத்தை மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் திரு. கே. என். நேரு, அவர்கள் தலைமைதாங்கி நடத்தினார். தொழிலாளர் ஆணையர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., கூடுதல் தொழிலாளர் ஆணையர் திரு. ப. கருப்பசாமி மற்றும் வாரியச் செயலாளர் திரு. அ. ஞானசேகரன், ஆகியோர்களும் கலந்து கொண்டனர். இவ்வாரிய கூட்டத்தில் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு அரசின் நலத்திட்டங்கள் விரைந்து கிடைத்திடுவது குறித்தும், உறுப்பினர் பதிவு, புதுப்பித்தல், திட்டங்களை செயல்படுத்துவதில் உள்ள இடர்பாடுகள் ஆகிய பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

மேலும் இக்கூட்டத்தில் அரசு பிரதிநிதிகள் அரசு செயலாளர், சட்டத்துறை, அரசு இணைச் செயலாளர், நிதித்துறை, போக்குவரத்து துறை ஆணையர், காவல் துறை ஆணையர், வேலையளிப்போர் பிரதிநிதிகள் சார்பில் திரு. எம். ஆனந்த், திரு. என். சுரேஷ்குமார், திரு. எ. கோபால கிருஷ்ணன், திரு. கே. செல்வராஜ், திரு. டி. எஸ். முத்து, ஆகியோர்களும் தொழிலாளர் பிரதிநிதிகள் சார்பில் திரு. ப. செல்வராஜ், திரு. எம். அருணகிரிநாதன், திரு. ஜெ. சேஷசயனம், திரு. எஸ். புருஷோத்தமன், திரு. வெங்கை புலியன், திரு. வி. கணேசன் (நா) உட்பட ஆகியோர்களும் கலந்து கொண்டனர்.

**********

-3/3

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9